29

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு - 2010/11 (மீள்பரீட்சை)
## (மார்ச்/ஏப்ரல் 2016) (வெளிவாரி)

## EDU 201 பிள்ளையின் விருத்தியையும் கற்றலையும் விளங்கிக்கொள்ளல்
## Understanding child development & learning

27 APR 2016 LIBRARY ... UNIVERSITY, SRI LANKA

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01(அ) கற்றல் தொடர்பாக மூன்று அறிஞர்கள் கூறிய கருத்துக்களை முன்வைப்பதுடன் ஒரு குழந்தையின் கற்றலைத் தீர்மானிக்கும் காரணிகளை குழந்தை வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ)"காலம், இடம், சூழ்நிலை என்பன கற்றலுக்கான ஊக்கலை வழங்குகின்றன" என்பதை கேட் லுவினின் (Kurt Luwin) இன் களக்கொள்கையுடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(10 புள்ளிகள்)

02.(அ) ஜீன் பியாஜே குறிப்பிடும் விருத்தி கட்டங்களையும் 6 வயது மட்டங்களையும் அட்டவணைப்படுத்துக.
(03 புள்ளிகள்)

(ஆ)உண்மைப் பொருட்களின் அனுபவங்கள் ஊடாக சிந்தனை முன்னேறுகின்றது என்பதை ஜீன் பியாஜே (Jean Piaget) கூறும் தூல சிந்தனைப் பருவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(07 புள்ளிகள்)

(இ) இயல்பூக்கங்கள் அடக்கப்படுமானால் பிழையான நடத்தைக் கோலங்கள் தோன்றலாம். அடிப்படையாகக் கொண்டு பரிசீலனை செய்க.
(10 புள்ளிகள்)

03.(அ)"புலக்காட்சி மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தியே ஞாபகம் எனப்படும்." ஞாபகத்தின் முக்கிய கட்டங்களை கற்றலுடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(10 புள்ளிக்)

(ஆ)"உயிரிகளின் நடத்தை மாற்றம் வலுவடைய மீளவலியுறுத்தல் அவசியம்." என்பதை ஸ்கின்னர் கூறும் நேர் மீளவலியுறுத்தல், எதிர் மீளவலியுறுத்தல் ஆகிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.
(10 புள்ளிகள்)

04.(அ) அகக்காட்சியின் ஊடாக நடத்தை மாற்றம் வினைத்திறனாவதற்கு கெஸ்ரால்ட்(Gestault) உளவியலாளர்கள் புலக்காட்சி அகக்காட்சி தொடர்பாகக் கூறிய கருத்துக்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ)தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையில் ஒரு இணைப்பை ஏற்படுத்துவதே கற்றல் எனக் கூறும் தோண்டைக் (Thorndike) முன்வைத்த கற்றல் விதிகளை எவ்வாறு வகுப்பறையில் பிரயோகிக்கலாம் என்பதை நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

05.(அ) கற்றல் இடமாற்றம் தொடர்பான கொள்கைகளுள், பொதுமையாக்கல் கொள்கை பெறும் முக்கியத்துவத்தினை அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) ஆளுமை விருத்தியில் நனவிலிப் பண்புகள் ஏற்படுத்தும் தாக்கத்தினை சிக்மண்ட் புரொய்ட்டின் உளப்பகுப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

06. பவ்லோவ் தனது பழைய நிபந்தனைப்பாட்டுக் கொள்கையினூடாக முன்வைத்த பின்வரும் கோட்பாடுகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

1. தூண்டி பொதுமையாக்கம்
2. தூண்டி வேறுபிரித்தறிதல்
3. நிபந்தனைப்படுத்தப்பட்ட துலங்கல் அழிதல்
4. துலங்கலின் திடீர் மீட்சி

(4x5=20 புள்ளிகள்)

07.(அ) "தூண்டல் - துலங்கல் பிணைப்பானது எவ்வளவுக்கு அண்மைக் காலத்தில் இடம்பெறுகின்றதோ அல்லது எவ்வளவுக்கு திரும்பத் திரும்ப இடம்பெறுகின்றதோ அந்தளவுக்கு நிலைப்படுத்தப்படுகின்றது" எனும் கூற்றினை ஜே.பி.வாட்சன் (J.B.Watson) இன் நடத்தை வாதக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) மனிதனின் நடத்தையானது அவன் வாழும் சூழல் சார்ந்தது என்பதற்கு மார்கிரட் மீட் கூறும் விளக்கத்தை அவரது ஆய்வின் அடிப்படையில் விளக்குக.

(10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. நுண்மதி ஈவு
2. மாஸ்லோவின் தேவைக்கொள்கை
3. நுண்ணறிவு பற்றிய பல்காரணிக் கோட்பாடு
4. தெரிவு செய் மீள வலியுறுத்தல்
5. நுண்மதியின் கூறுகள்

(5x4=20 புள்ளிகள்)

*****